137

உ
ஸ்ரீ ராமஜெயம்.



திருவண்ணாமலை என்று பெயர்பெற்றோங்கிய
திருநாள் மலை
# ஸ்ரீ கோவிந்தசுவாமி

## தோத்திரச்
# சந்தச் சிந்து

7-OCT 1927
MADRAS

குன்னூர்
பெரியவீடு மகா-ள-ள-ஸ்ரீ கி மு
ஸ்ரீ நமசிவாயமுதலியாரவர்கள்
விருப்பத்தின்படி

---

குன்னூர் வித்துவான்
ஸ்ரீ S. சண்முகவேலாயுதம்பிள்ளையவர்கள் குமாரர்
ஆறுமுக நாவலர் இயற்றியதை

---

ஸ்ரீவில்லிபுத்தூர் கோதா விலாசம் பிரஸில்
பதிப்பிக்கப்பெற்றது.

[illegible] 1927. [விலை அணா 1½

Q22:417
1927
184287

137

உ

ஸ்ரீ ராமஜெயம்.



# ஸ்ரீ கோவிந்தசுவாமி
# ஸ்தோத்திரச் சந்தச் சிந்து.

### காப்பு.

ஆயர் குலத்தில் அவதரித்தாங் கானிரையை
மேய விடுத்தகோ விந்தத்தில்—நாயகமாய்த்
தங்குங்கோ பாலனிரு தாடொழுமின் னாற்கருளும்
துங்கமதத் தந்திமுகத்தோன்.

## திருநாள்மலை வரலாறு.

### சிந்து.

1. நீர்சூழ் அவனியில்—துஷ்டர்கள்
நிறைந்தன ரென்றுபூமா—திரைந்து முன்னாள்
சீரார் பணவரவின்—சயனத்தில்
சேருந் திருமாலுறைநற்—சீரக்கடலில்

2. சென்றுதன் குறையுரைக்கவே—மாயவனும்
செல்லென விடையளித்து—அல்லல் தவிர்க்க
வென்றிசேர் வசுதேவன்—சேயெனவெ
மேதினியில் கண்ணன்யென—ஓதவே வந்து

3. கஞ்சன் எனுமாமன்—செய்யும் வஞ்சக்
காரணத்தால் நந்தகோபன்—தோரணவிற்பால்
கொஞ்சி விளையாடி வளர்ந்து—பற்பல
கோலங்கள் செறிந்ததிருச்—சாலங்கள் செய்து

4. இருமூன்றும் வயதில்—கன்று மேய்த்து
இன்பமுடன் வருவான்—அன்பர் தொழவே
திருவாழ் அன்னகரில்—அன்னாள்
சேர்ந்த மிடையரன்பு—கூர்ந்து மழை

5. வேண்டியே இந்திரனை—பூசிக்க
விந்தையுடன் செல்லுவோரைத்—தந்திரமதாய்
தூண்டிச் சொல்வான் மாயன்—இந்தத்
தொல்லுலகில் வான்பொழிந்து—அல்லல் தவிர

6 கோவர்த்தன மென்னுங்கிரியில்—நீங்கள்
கூடிப் பூசை புரிந்தால்—கொண்டல் பொழியும்
மேவுங்கள் என்றுரைக்கவே—பசுக்கள்
மேயுங் கோவிந்தத்திற்கே—ஆயர் பொங்கலும்

பூசையுஞ் செய்தார்கள்—கண்டு
பொங்கியே தேவேந்திரனும்—சங்கையறவே
வீசிப் பொழியு மழையால்—தடுக்க
வேயத் தனிக்கக் கண்ணன்—ஆயத்தமாகி

8 கோவிந்த மென்னுங் கிரியை—குடையாய்க்
கொண்டு கல்மழை தடுத்தங்கண்டர் தொழவே
ஆவினங்களைக் காத்து—நின்றான்
ஆகையால் கோவிந்தனென்று—ஓகையுறும்பேர்

9. செய்ய விடையர் திருநாள்—நடந்த
செய்தி திருநாள்மலையென்—றெய்தியதுவே
வய்யத்துயிர் காக்குங் கடவுள்—அன்று முதல்
மாக்ஷியுட னம்மலையில்—தீக்ஷண்யமுடன்

10. அருளுடனே யமர்ந்து— மன்னுயிரை
ஆதரித்தா ரிங்குகன்னி—மாதங்களிலே
திருநாள் விளங்குவதும்—யாதவர் முன்
செய்த முறைதானிதுவு—மெய்மையுரையே. (நீர்)

கோவர்த்தன மலையே கோவிந்தமென்னும் பெயர்பெறு மாதலால் கோவிந்தத்தையே கண்ணன் குடையாய்க் கொண்டதாய் இங்கே கூறலாயிற்று.

---

இராகம்—செஞ்சுருட்டி. தாளம்—ஆதி.

## சோலைவளம்.

1 பாந்துலாவிடு மாமர மீதுசில் — குரங்குலாவி விநோதமதாகவே
டாய்ந்து பலாவின் சுளையை — பேடைக்கு வந்தே
ஈந்து குலாவுங் கிளையை
பசுமைக்கார்முகில்—கசியச் சேயுயர்
தருவுற்றூர்கிளை—விறைவிற் றுவியப்
பாங்கில் தடவிப் பார்க்குமே — இரவிதனைத்
தாங்கிச் சோபங்கள் தீர்க்குமே.

2 சரங்குலாவிய சீர்மலரார் தரு—நிறைந்து மாமணமே நிரைவாயது
சண்பகங் குங்கும மரம்—முல்லை ரோஜாவுந்
தண் திகழும் பல நிரம் —
சாரும் புட்பவி—சாலம்பெற்றுள
தோரும் பர்பல—நாளுங் கற்றிடுஞ்
சங்கீதம்பாடி வண்டுமே—மதுவையுண்ண
இங்கிதமாக வண்டுமே.

### கோனேரி வாவிவளம்.

3 கலந்து மாபல வானதிலேகனி—கனிந்து வீழ்வது வேகசிவாய்மது
காலாய்ப் பெருகும் நதியே—அதனை யுண்ணும்
கோலவரால்கள் கதியே
காட்சிய தாயுறு—மாட்சிமை சேர்திரு
நாட்கிரியானிரு—தாட்குவ மானமே
கஞ்சந் திகழுஞ் சங்கமே—தினம் நினைந்தால்
நெஞ்சம் நிரையும் துங்கமே.

4 அலர்ந்த தாமரை மாமலரேயெரி—யணிந்த தூளிகளேதிகழாகுதி
ஆரும் வண்டோதும் முனியே—இதனைப்போலச்
சீரும் வேறுண்டோ யினியே
அதனிற்றுவளி—மூரலத் தோகைகள்
அகவத்தாமரை—யசையப்போதினில்
அன்னங்கள் தூங்கும் வளமே—சகல பாவ
வின்னங்கள் நீங்கும் குளமே.

———

### வண்ணச்சிந்து

1 மிகுத்த பண்டம் நிரைத்துமெங்கும்—மெச்சுவளத்த தநேகரும்
திகைப்பரெங்கும் நெருக்கி நின்றுஞ்—செப்பிமேர்புத மாதரும்
மேவுங் கடை வீதி
விலாசமிகும் சோதி
விராவும் பிரக்கி யாதி
விளங்கிடும் நன் னீதி
வெற்பெனவே யோங்குந் திரு மாடம்—தக்க
விந்தையாய் விளங்குஞ் சித்திர கூடம்—வந்தோர்
மேவியேவ சிப்பதற்கென்
றேவியம்பொ றித்தமடம்—மின்னும்—சுதை மன்னும்.

2 மகத்துவங்கொண் டிருக்குமெங்கும்—மக்களுரைத்திடு தோத்திரம்
தகத்துலங்கும் மதிக்கவிஞ்சுஞ்—சத்தி மிகுத்தியல் க்ஷேத்திரம்
மாதவங் கொள் சாது
மலைமேலிருந் தோது
மகிமையுரை மீது
மதிசெலு மப் போது
மாதவர் பாடும் பஜனைக் கீதம்—அங்கே
மாக்ஷிமை சேரந்தணர் சொல் வேதம்—யெங்கள்
வாசுதேவ னே கோபால
பூஜிதா வென் றே யெங்குஞ்சொல்—வரவும்—துதி—மேவும்.

---

## துதி.

கண்ணபிரான் என்ற வர்ணமெட்டு.

1 தங்கைமன் சிங்கனுகிச்
சாய்த்துமே முன் கொன்றான்—சேயைக்
காத்தருளி நின்றான்
ஜானகியாம் சீதையுடன்—கானகத்தில் சென்றான்

---

சங்கமெனும் பொங்கரக்கர்
சாயராம பாணம்—பட்டு
மாயவேதற் பூணும்
சத்திய விபீஷணனை—நித்தியமும் பேணும்.

---

2 ஆயர்குல நாயகமே
யாகவந்த பூபன்—மகிழ்
வாகநந்த கோபன்
ஆசைமனை யாள்வளர்த்த—தேசுகொள் காந்தீபன்

---

மாயவஞ்சத் தாயென்வே
மாக்ஷிப்பூதம் வாவி—வாக்
காக்ஷிப்பாலுண் டாவி
மாண்புடனுண் டேயிருந்தான்—வீம்புசெய்து மேவி.

---

3 வஞ்சமிலாப்—பஞ்சவர்க்கு
வாய்ந்திடு நன் னேசன்—கஞ்சன்
மாய்ந்திடச்செய் தேசன்
மார்க்கமுடை யோர்கள் துயர்—தீர்த்திடும் விஸ்வாசன்

---

குஞ்சரமுன் தஞ்சமெனக்
கூக்குரலிட் டாதி—யென்ச்
சீக்கிரமா யோதிக்
கொண்டவுடன் ஆதரிக்—கொண்டிடுத்தும் நற் சோதி.

---

4 வேதனும்நன் – னீதமுடன்
மேவும் பத்ம நாபன்—வென்றி
வாவும் சார்ங்க சாபன்
மேம்படும்வண் டாருகின்ற—தேம்துளப நீபன்

---

ஆதரவாய் – மாத மூன்றென்
றுயகொண்டல் நாடி—மலைக்
காய பூஜை யாடி
அன்றுபுரிந் தார்கோவிந்தன்—இங்கிதங்கள் கோடி.

---

5 நீறணிந்த – பூரணனென்
நீத வடி வேலன்—பெரும்
மாதுலன்கோ பாலன்
நிதி கொடுக்கும் மதிபெருக்குந்—திதி நிகழ்த்துஞ்சீலன்

---

தேவருண – டாறுமுகம்
செந்தமிட்கெந் நாளும்—நலம்
தந்தருள்செய் தாளும்
செய்யதிரு நாட்கிரியான்—துய்யவருள் நீளும்.

---

## துதி.

### நாகரீக தர்பார் லாவணிச் சந்தப்பாட்டு.

(1) ஆரும் பஞ்சாயுதமுங் கனகம்—சாருஞ் சிங்கார மிகுந்திவருங்
ஆரன்சங் கோதையுடன் பரவும்—தரங்கந்தங்கும்
சேருங் கங்காநதியுந் திருவும்.

(2) ஆவின் கன்றோடு விளங்கியுமன்—றுடஞ்சஞ்சார மிகுந்து மகிழ்ந்
தாழும் பண்பான நெடும் புவனம்—விடந்தங்குஞ் செங்
காளிங்கன் மீது நடங் கவனம்.

(3) தாயுஞ் சந்தோஷ மிகுந்திடவுந்—தாவும் பண்பான நலம்பலவுஞ்
சாருஞ் சங்கீதமுறுங் குழலும்—கரங் கொண்டும்பர்
கூரன்பின் வாவும் நறுங் சழலும்.

800009 18

(4) பூவுஞ்செந்தேனு முறுந் துளபன்—கோவிந்தன்பாதம்நினைந்திடினும்
போதுஞ் சந்தான மிகுந் தனமும்—மனங்கொண்டன்ப
ரதங்கந்தீர வருந் தினமும்.

---

## துதி.

### ஆடுபோம்பே—யென்ற வர்ணமெட்டு.

பாதங் காண்பாய் நெஞ்சே
பாதங் காண்பாய் மாயன்
பங்கய மன்னதிருப் பாதங்காண்பாய்.

(1) பால் தயிர் வெண்ணெசுளை வாரியுண்டான்—அதைப்
பார்த்த கோவியராலே கட்டு முண்டான்
காலுதையால் சகடன் வீழக் கண்டான்—வஞ்சக்
காரியாம் பூதகியினுவி கொண்டான். (பாதங்)

(2) கன்றாக வந்தவனை யன்று தூக்கி—நன்றாய்க்
காய்த்த விளா மரத்தின்மீது தாக்கி
வென்றிசே ரவ்வரக்கன் ஆவி போக்கி—நின்ற
விந்தை விளையாட்டை யெந்நாளும் நோக்கி. (பாதங்)

(3) கோவியர் தங்களுடனே கொண் டாட்டம்—கொண்டு
கோலாகலம்புரிய நாளும் நாட்டம்
வாவியில் காளிங்கன் முடியில் நாட்டம்—செய்த
வாசுதேவன் புகழுமே சிரேஷ்டம். (பாதங்)

(4) வேடிக்கையாக ஆயப்பெண்கள் கூவி—யழ
விந்தைத் துகிலுடன் மரத்தில் மேவி
நாடிக் கீதங்கள்பாடி யேவு லாவி—நின்ற
நாயகன் காக்கவே மலர்கள் தூவி. (பாதங்)

---

### பாற்காவடியான் கந்தன்—யென்ற வர்ணமெட்டு.

காப்பான் வாதன் என்றே மலரடி
காணுவார் சித்தம் நித்தம். (காப்)

கரங்களைத் தூக்கி
கவலையை நீக்கி
வரம்பெறவே நோக்கி
வந்தித் தன்பும் நெஞ்சில் தேக்கி. (காப்)

நிறைந்திடும் வாசன்
நேய விஸ் வாசன்
நறுந்துளப வுல் லாசன்
நண்புற் றன்பர்க்கருள்ஜெக தீசன். (காப்)

புட்பங்கள் தூவும்
பூஜைகள் வாவும்
கற்பகச் சோலைத் தேவும்
கண்டார்ச்சித்திங் கென்றும் மேவும் (காப்)

நீறணிந்தி யாண்டும்
நேயமே வேண்டும்
ஆறுமுக னூல் தூண்டும்
அன்புந்திகழ்தமிழின்பம் பூண்டும் (காப்)

---

## விரிசுருட் கும்மி

(1) வாரணனுடிய காரணனுமெங்கள் நாரண னுன்மலர் பாதம்—தன்னை
நத்திய கும்மிக்குச் சித்திவிநாயகன் முத்தி வரப்பிர சாதம்—தரும்
மனதுங்கனி வொடு வந்திவண்
உனதந்திகழ் தமிழுஞ் சொலும்
வந்து பாடுங்கடி கீதம்.

2) ஆவிர்த்தி—யானதால்—கோவர்த்தன மென்றே
மேவர்த்தமானகோ விந்தம்—இதை
அந்த நாளில் தூக்கும் விந்தையினுலேகோ
விந்தனென்றுனது தொந்தம்—இந்த
அழகின் கிரி மிசை நின்றளி
பழகுந்தொடை யசையும்புயன்
அன்புதா னித்தியானந்தம்.

---

## திருநாள்மலை—வரலாற்றுக்கும்மி.

(1) பொற்பார் புரட்டாசி மாதத்திலே—இந்தப்
பூமி செழிக்க மழை பொழியக்
கற்பகக்கா விந்திரர்க்குச் செய்—பூஜையைக்
காரணங் காட்டி விலக்கிக் கண்ணன்.

(2) கோவிந்த மென்னுங் கிரியினுக்கா—கட்டுங்
கோலம் பொருந்திய பூஜையென்னக்
கோவியரு மங்கே பொங்கலிட்டு—அந்தக்
கோபாலன் சொன்னபடி நடந்தார்.

(3) இந்திரன் கோபமாய்க் கல்மாரி—பெய்விக்க
ஏங்கிப் பயந்த பொதுவர்களும்
சந்தோஷங் கொண்டிட யிந்த—மலைதனைத்
தாங்கினான் கண்ணன் குடையாக.

(4) அன்றுமுதல் கன்னி மாதத்திலே—துக்க
மான சனியெனும் வாரத்திலே.
யென்றுந் திருநாள் வழங்குவதால்—இதற்
கெய்திய பேர்திரு நாள் மலையே.

(5) வைகுந்த வாசன் அனாதையை—ரக்ஷிக்கும்
மால்திருப்பாற்கடல் மீதினிலே
வைகுந்த யாநிதி யாறுமுகன்—தமிழ்
மாலையணிந்திடு மாதவனே.

(6) காவற் கடவுளாங் கோவிந்தன்—தோத்திரம்
கற்றவர் கேட்டவர் மேதினியில்
தேவர்க்கு மேலாக வாழியவே—செப்பிச்
செந்தமிழென்னாளும் வாழியவே.

முற்றியது.

கோதாவிலாசம் பிரஸ்,
ஸ்ரீவில்லிபுத்தூர்.